**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.29/2025 நாள்-06.10.2025

**பி.வா.சா.1-கந்தம்மாள்**

**பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்**

வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். வாதியின் வீட்டின் கதவு எண்136. என் வீட்டின் கதவு எண்.136/1 ஆகும். என்வீடானது மேற்கு பக்கமும், வாதியின் வீடானது கிழக்குபக்கமும் உள்ளது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்து 1ம் வாதிக்கும், 2ம்தபசில் சொத்து என் கணவருக்கும் பூர்விகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதி 1ம் தபசில் சொத்தை 2ம் வாதிக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் தபசில் சொத்தை 3ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்டாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் தபசில் சொத்து விவரத்தில் கிழக்குமாலாக முத்துச்சாமி மகன் பரத்சிங்கராஜா வீடு மற்றும் 26 அடி நீளத்தில் உள்ள பொதுச்சுவர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் வாதிகள் அவர்கள் வீட்டின் மாடி கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். அப்போது மாடி கட்டக்கூடாது என்று நாங்கள் ஆட்சேபணை செய்து வந்தோம் என்றால் சரிதான். அதனால் எங்கள் மீது காவல் நிலையத்தில் 1ம் வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதனால் நான் வாதிகள் பெயரில் கேவியட் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். கேவியட் மனுவின் சொத்து விவரத்தில் மேற்கு மாலாக சின்னச்சாமி வீட்டின் பொதுச்சுவராக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். கேவியட் மனுவில் கதவு எண்.136 என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூர்விக சொத்துக்கள் சம்பந்தமாக பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. அந்த வழக்கில் தாவா சொத்து வழக்குரை மற்றும் எதிர்கோரிக்கையில் சொத்து விவரமாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். தாவா

சொத்தை பொறுத்து எந்தவிதமான பாக வழக்கும் நிலுவையில் இல்லை என்றும், நான் உண்மைக்கு புறம்பாக நிருபணவாக்மூலத்தில் கூறியுள்ளேன் எ ன்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு மூத்த மனைவியின் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் , அவர்களை விட்டுவிட்டு 2 ம் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தது செல்லாது என்று எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றும், அதனால் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. கதவு எண்.136 ல் எங்களுக்கு எ ந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். அதனால் இரண்டு சொத்திற்கும் இடையில் உள்ள பொதுச்சுவரில் வாதிகள் வீடு கட்டுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. 1,2 ம் வாதிகள் 1ம் தபசில் சொத்தில்மாடியில் வீடு கட்டுவதை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் தடுத்து வருகிறோம் என்றும், அதனால் வாதி கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றும், பி.வா.சாஆ.1 வழக்கிற்கும் வழக்கின் சொத்து விவரத்திற்கும் சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.